**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 1 /2020 PW3 .**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேவூகன் | தந்தை/கணவர் பெயர்: ராசு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

---

**(3ம் எதிரி ஆஜர் 1,2 மற்றும் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1,2 மற்றும் 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>12.11.2025 முதல் விசாரணை</u>:**

**1.** என்னுடைய சொந்த ஊர் நெற்குப்பை பூசணிக்களாமாகும். தற்போது காரைக்குடியில் இருக்கிறேன். அ.சா.1 அழகு என்பவரை எனக்கு தெரியாது. எதிரிகள் எனக்கு பங்காளி உறவு முறை ஆனால் நெருங்கிய பழக்கம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 மற்றும் எதிரிகளுக்கு என்ன முன்பகை எதற்காக புகார் கொடுத்து வழக்குபதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. அ.சா.1 கொடுத்த புகாரில் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் என்னை விசாரித்த போது அ.சா.1, 4 எதிரி மற்றும் அவரது மூத்த அண்ணன் சின்ன கருப்பன் என்ற கருப்பையா ஆகியோர் இடையே நடந்த சொத்துப்பிரச்சனையில் அடிதடி ஏற்பட்டு சின்ன கருப்பன் இறந்து விட்டார் என்றும், அந்த வழக்கில் அ.சா. 1 மற்றும் குடும்பத்தினர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிய வந்து இருந்த நிலையில் 28.01.2019 ம் தேதி காலை 11.30 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் பூசணிகளத்தில் உள்ள அவரது வீட்டிற்கு சென்ற போது 1ம் எதிரி 3,4 எதிரிகளின் தூண்டுதலால் அ.சா.1, 2 யை அவரது வீட்டிற்குள் செல்ல வீடாமல் தடுத்தார்கள் என்றும், மேலும் அவர்களை அசிங்கமாக பேசி சத்தம் போட்டார்கள் என்றும், அப்போது 1ம் எதிரி அ.சா.1 யை பார்த்து என் அப்பனை கொன்ற உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்றும், உன்னையும் உன் குடும்பத்தையும் கரு அறுக்காமல் விடமாட்டேன் என்றும், உன் சாவு என் கையில் தான் உள்ளது என்றும் மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. மேலும் 2ம் எதிரி

மண்வெட்டி கடையை எடுத்துக்கொண்டு அ.சா.1,2 யை அடிக்க சென்று அ.சா.2 கீழே விழுந்ததில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது என்று வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்கள் கேட்டு கொண்டதற்காக உண்மை விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**